10/=

பக்கங்கள் 06

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 130 வியாழக்கிழமை செப்ரெம்பர் 28 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48



## சிறைக்குள் கமரா

தெரிவு செய்யப்பட்ட சில சிறைச்சாலைகளில் சீ.சீ.ரீ.வி கமராக்கள் பொருத்தப்படவுள்ளன. அடுத்த வாரம் முதல் கமராக்கள் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

வெலிக்கடை, அங்குனு கொலபெலஸ்ஸ, பல்லேகலே, மஹர மற்றும் நீர்கொழும்பு சிறைச்சாலைகளில் புல்ஹெச்டி ரக அதி நவீன சீ.சீ.ரீ.வி கமராக்கள் பொருத்தப்பட உள்ளன.

அநேகமான சிறைச்சாலைகளின் வெளிப்பகுதிகளில் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதாகவும், தற்பொழுது சிறைச்சாலைகளின் உள்ளேயும் கமராக்களை பொருத்துவதற்குத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறைச்சாலைகளுக்குள் இடம் பெறக்கூடிய குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (உ)

## வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில்

# இலங்கை வேகமில்லை

### ஐரோப்பிய ஒன்றியம் கவலை



ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகைக்காக இலங்கை அரசாங்கம் அளித்திருந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் சில விடயங்களில் மெதுவான முன்னேற்றங்களே இருப்பதாக ஐரோப்பிய ஒன்றியம் கவலை வெளியிட்டுள்ளது. அதேவேளை, தனது வாக்குறுதிகளை நிறைவேற்றும் ஆற்றல் இலங்கை அரசாங்கத்துக்கு இருப்பதாகவும், ஐரோப்பிய ஒன்றியம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பனவுடன் நடந்த சந்திப்பின் போது, ஐரோப்பிய ஒன்றிய ஆணையாளர் கிறிஸ்ரோஸ் ஸ்ரைலியனிடெஸ் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

பிரசெல்சில் உள்ள ஐரோப்பிய ஒன்றியத் தலைமையகத்தில் குறித்த சந்திப்பு நடைபெற்றது.

புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் இலங்கையில் ஏற்பட்டுள்ள முக்கியமான முன்னேற்றங்கள் குறித்து ஐரோப்பிய ஆணையாளர் இந்தச் சந்திப்பின் போது வரவேற்புத் தெரிவித்துள்ளார்.

இதன்போது, அனைத்துலகத் தர நியமங்களுக்கு ஏற்ப சட்டரீதியாக மனித உரிமைகள் தரத்தை உயர்த்துவது மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (எ)



## கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைது

வவுனியா பஸ் நிலையத்தில் இன்று காலை கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா போதைப்பொருள் தடுப்புப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து வவுனியாப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின் போது கஞ்சா கைப்பற்றப்பட்டது.

கிளிநொச்சியில் இருந்து அனுராதபுரம் நோக்கிப் பயணிக்கவிருந்த 60 வயதுடைய நபரை வவுனியா பஸ் நிலையத்தில் சோதனை செய்தபோதே அவரது உடமையில் இருந்து ஒரு கிலோ 8 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது. இதனையடுத்துக் குறித்த நபர் கைது செய்யப்பட்டார். இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்கள். மேலும் குறித்த நபர் வவுனியா நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். (எ)

## தமிழர் மனங்களை வெல்ல

# மைத்திரியும் தவறிவிட்டார்



இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான நல்லாட்சி அரசாங்கமும் தமிழ் மக்களின் மனங்களை வெல்லத் தவறிவிட்டது என, மனித உரிமைகள் செயற்பாட்டாளரான நிமல்கா பெர்ணான்டோ. தெரிவித்துள்ளார்.

இதேவேளை புதிய அரசியல் யாப்புத் தொடர்பான இடைக்கால அறிக்கையில், பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்ற விடயம் குறிப்பிடப்பட்டுள்ளதன்

06

## பலவந்தத் தடுத்தல் குறித்த ஐ.நா. குழு இலங்கைக்கு விஜயம்

பலவந்த தடுத்து வைப்புக்கள் தொடர்பிலான ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயற்குழு இந்த ஆண்டின் இறுதியில் இலங்கைக்குப் பயணம் செய்ய உள்ளது.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 4ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரையில் இந்த செயற்குழுவினர் இலங்கையில் தங்கியிருப்பார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. பலவந்தமான முறையில் தடுத்து வைக்கப்பட்டுச் சந்தேக நபர்களின் உரிமைகள் முடக்கப்பட்டுள்ளதா? என்பது குறித்து இந்தக் குழுவினர் விசாரணை நடத்த உள்ளனர். மனித உரிமை மற்றும் சட்ட திட்டங்களுக்கு அமைவாகக் குற்றச் செயல்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா என்பது குறித்து விசாரணை நடத்தப்பட உள்ளது. அரசாங்கம், அரச சார்பற்ற நிறுவனங்கள், அரசாங்க நிறுவனங்கள் போன்றவற்றிடமிருந்து இந்தச் செயற்குழு தகவல்களைத் திரட்டிக் கொள்ள உள்ளது. (எ)

## வேட்பாளர் தெரிவில் ஐ.தே.க. தீவிரம்

மாகாண சபை தேர்தலுக்காக வேட்பாளர்களை தெரிவு செய்யும் முனைப்பில் ஐக்கிய தேசியக் கட்சி ஈடுபட்டுள்ளது. இதன் பொருட்டு, 17 வேட்பு மனு சபைகள் உருவாக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

மாவட்டங்கள் தோறும் நேர்முக பரீட்சைகளை மேற்கொள்ளவே இவ்வாறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். தெரிவுகள் அனைத்தும் மிகவும் வெளிப்படை தன்மையுடன் இடம்பெறும் எனவும் அவர் குறிப்பிட்டார். (உ)

## மினி பஸ்ஸுடன் மோதிய ஆசிரியர் காயம்

சாவகச்சேரி கச்சாய் வீதிப் பகுதியில் இன்று காலை 7 மணிக்கு மினிபஸ்ஸுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

கொடிகாமத்தைச் சேர்ந்த 36 வயதான விஜயரூபன் என்பவரே காயமடைந்தவராவார்.

தனியார் கல்வி நிலையத்தில் கற்பித்து விட்டுச் சாவகச்சேரி நோக்கி சென்ற போது கொடிகாமத்தில் இருந்து கச்சாய் வீதி ஊடாக சாவகச்சேரிக்குச் சென்ற மினிபஸ் உடன் பின்பக்கமாக மோதி அவர் விபத்துக்குள்ளாகியுள்ளார். மினி பஸ் சமிக்ஞை இட்டு உள் ஒழுங்கை ஒன்றுக்குத் திருப்ப முற்பட்டவேளை சமிக்ஞையைக் கவனிக்காது

06

# எங்கள் ஆலோசனைப்படியே ஆட்சி நடத்த வேண்டும்!



நாட்டின் ஆட்சியாளர்கள், மகா நாயக்க தேரர்கள் மற்றும் மகா சங்கத்தின் ஆலோசனைகளை முழுமையாகப் பின்பற்ற வேண்டும் என்று அமரபுர பீடத்தின் மகாநாயக்கரான கொட்டுகொட தம்மவாச தேரர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஏற்பாட்டில் நேற்று அலரி மாளிகையில் நடந்த ஆயிரக்கணக்கான பிக்குகளுக்கு தானம் அளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். “மகாநாயக்கர்கள் உள்ளிட்ட மகா சங்கத்தின் ஆலோசனைப் படியே நாட்டை நிர்வகிக்க வேண்டும். பௌத்த மதத்தில் கூறப்பட்டுள்ள தம்ம போதனைகளின் அடிப்படையில் தான், பௌத்த மதகுருமார் தமது ஆலோசனைகளை வழங்குவர். மகா சங்கத்தின் ஆலோசனைப்படி தான் டி.எஸ்.சேனநாயக்க ஆட்சி நடத்தினார்.” என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ)



# புறக்கோட்டையில் விபத்து
# ஒருவர் பலி; ஒருவர் காயம்

புறக்கோட்டை - பெஸ்டியன் மாவத்தை பஸ்தரிப்பிடத்தில் இடம் பெற்ற விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

பஸ்வண்டியொன்றைப் பின் நோக்கி எடுத்த போது, பெண் உள்ளிட்ட இருவர் அதில் சிக்குண்டு விபத்துக்குள்ளாகியுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். விபத்தில் படுகாயமடைந்த இருவரும் தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட வேளை, குறித்த பெண் பலியாகியுள்ளார்.

இவர் எல்பிடிய பகுதியைச் சேர்ந்த 67 வயதான ஒருவராகும். விபத்துத் தொடர்பில் பஸ் சாரதி மற்றும் அதன் உதவியாளரும் கைது செய்யப்பட்டுள்ளனர். சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை புறக்கோட்டைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (உ)

# ரயிலில் பாய்ந்து மாணவி தற்கொலை



வேயங்கொடைப் பகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவியொருவர் (வயது-16) ரயிலில் மோதித் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது. வேயங்கொடை உதுவம்போகஹவத்த என்ற பகுதியில் வசிந்துவந்த மாணவியே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார். இவரது தற்கொலைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ)

## சு.க. விலிருந்து மூவர் விலகல்

கிழக்கு மாகாண சபையின் அம்பாறை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் மூவர், அந்தக்கட்சியிலிருந்து விலகியுள்ளனர். நல்லாட்சி அரசாங்கத்தின் செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே, கட்சியிலிருந்து விலகுவதாக, அந்த மூவரும் தெரிவித்தனர்.

டபிளியூ. டீ. வீரசிங்ஹ, சந்திரா தெவரபெரும மற்றும் டி.எம் ஜயசேன ஆகியோரே இவ்வாறு விலகியுள்ளனர். (உ)

## வலைகள் அன்பளிப்பு



பாசையூரில் இருபது மீனவர்களுக்கு அவர்களது தொழிலை மேம்படுத்துவதற்காக வலைகள் வழங்கப்பட்டுள்ளன. வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசாவின் 2017ஆம் ஆண்டுக்குரிய பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டிலிருந்து குறித்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. சட்டத்தரணி றெமிடியசின் சிபார்சில் குறித்த வலை உபகரணங்கள் நேற்றுக் கையளிக்கப்பட்டது. (உ)

## கைக் குண்டுடன் ஒருவர் கைது!

பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட கைக் குண்டு ஒன்றுடன், மொரவக்க பகுதியில் வைத்து பொலிஸார் இன்று அதிகாலை கைது செய்துள்ளனர்.

ஒபாத பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இவர், அக்குரஸ்ஸ, ஊருபொக்க, கொஸ்மோதர, பிட்டபெந்தர, ஹினிந்தும, நெலுவ, இமதுவ, யக்கலமுல்ல, தினாவல ஆகிய பகுதிகளில் பல்வேறு கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அத்துடன் 19 தொழிற்சாலைகளை உடைத்து பணம், பொருட்களைத் திருடியுள்ளமையும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. (உ)

## நிறுத்தி வைத்த பேருந்து கடையில் மோதி விபத்து



கிளிநொச்சி, கனகபுரம் பிரதேசத்தில் சாரதி இன்றிப் பயணித்த பேருந்து ஒன்று விபத்துக்குள்ளாகியதில் நபர் ஒருவர் காயமடைந்துள்ளார். நேற்று முற்பகல் 10 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பேருந்தின் சாரதி தேநீர் அருந்துவதற்காகப் பேருந்தை வீதி ஓரத்தில் நிறுத்திவிட்டுச் சென்ற சந்தர்ப்பத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

சாரதி பேருந்தை நிறுத்தி விட்டு செல்லும் போது கை பிறேக்கை இழுத்து வைப்பதற்கு மறந்துள்ளதுடன், பேருந்து நிறுத்தி வைக்கப்பட்ட பிரதேசம் ஒரு பள்ளமான இடம் எனக் கூறப்படுகின்றது. சாரதி இன்றி பள்ளத்துக்குள் பயணித்த பேருந்து, அருகிலிருந்த கடையுடன் மோதியுள்ள நிலையில் அங்கிருந்த நபர் ஒருவர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

# புலமைப் பரிசில் தேவையில்லை



“தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை பிள்ளைகளுக்குத் தேவையில்லை” எனக் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்றிருந்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். கல்விப் பொதுத் தராதர உயர்தரம் மற்றும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைகளில் தற்போது செய்யப்பட்டு வரும் மறுசீரமைப்புக்களின் பின்னர், தரம் ஐந்துக்கான புலமைப் பரிசில் பரீட்சை குறித்துத் தீர்மானம் எடுக்கப்படும்.

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை அம்மாக்களுக்கான பரீட்சையாகவே அமைந்துள்ளது, மாணவ, மாணவியருக்கு இந்தப் பரீட்சை தேவையில்லை. எதிர்காலத்தில் அம்மாக்களுக்கான பரீட்சைக்கு வேலி போடப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ)



# வரவேண்டிய நேரத்தில் அரசியலுக்கு வருவார்

“காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஆறுமுகன் தொண்டமானின் மகன், ஜீவன் தொண்டமானைக் கட்சிக்குள் கொண்டு வரவே, தேசிய சபை கூடுவதாக விமர்சனம் செய்தனர். அவர், கட்சிக்குள் வரும் போது வருவார்” என்று, மத்திய மாகாண விவசாயத்துறை மற்றும் தமிழ்க் கல்வி அமைச்சர் மருதபாண்டி இரமேஷ்வரன் தெரிவித்தார்.

“மக்களின் சக்தியையும் பலத்தையும் கொண்டு காங்கிரஸ் செயற்படுகிறது. தொழிலாளர்களாகிய நீங்கள் தான், காங்கிரஸின் பங்காளிகள். மலையகத்தில் உள்ள பல ஆலயங்களுக்கு இ.தொ.கா பல உதவிகளை செய்துள்ளது. ஆனால், இவை அனைத்தும் காங்கிரஸ் விளம்பரத்தைத் தேடி செய்யவில்லை” என்றும் அவர் சுட்டிக்காட்டினார். ஹட்டன் லெதண்டி கலனிவத்தை தோட்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்துக்கு, நவக்கிரகச்சிலை வழங்கும்வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (உ)

## பாடப் புத்தகம் பெற வவுச்சர் முறை அறிமுகம்



பாடசாலைப் பாடப் புத்தகங்களுக்காக வவுச்சர் முறையை அறிமுகம் செய்வது தொடர்பில் கல்வியமைச்சு அவதானம் செலுத்தியுள்ளது.

பாடப்புத்தகங்களை அச்சிடும் போது ஏற்படுகின்ற அதிக செலவைக் குறைக்கும் நோக்கில் இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தவுள்ளதாக கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் கூறினார்.

அதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் தற்போது திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார். (உ)

# எரிமலை வெடிக்கும் அபாயம்



ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றம்



இந்தோனேசியாவின் பாலித் தீவில் உள்ள மிகப்பெரிய எரிமலை சீறத் தொடங்கியுள்ளதால் பாதுகாப்புக் கருதிப் பொது மக்கள் வெளியேறத் தொடங்கியுள்ளனர். குறித்த எரிமலையில் இருந்து தற்போது நீராவி மற்றும் கரும்புகை வெளிப்பட்டு வருவதால் பொதுமக்களிடையே அச்சம் எழுந்துள்ளது.பாலித் தீவில் உள்ள எரிமலை எந்த நேரத்திலும் வெடிக்கும் நிலையில் இருப்பதால் எரிமலை அருகே உள்ள பகுதிகளில் வசித்துவரும் 75 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்கு அப்புறப் படுத்தப்பட்டுள்ளனர்.எரிமலையைச் சுற்றியுள்ள 12 கிலோ மீற்றர் பகுதிகளுக்கு பொதுமக்கள் நுழையவும் தடை விதிக்கப் பட்டுள்ளது.மேலும் விமான சேவையும் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் பாலித் தீவில் சுற்றுலாவும் கடுமையாக பாதிக் கப்பட்டுள்ளது.இந்தோனேசியாவில் 130 க்கும் மேற்பட்ட எரிமலைகள் இருக் கின்றன. அவற்றில் "அகுங் "எரிமலை அவ் வப்போது சீறத்துடன் காணப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## புற்றுநோயால் அவதியுறும் சிறுவன்: தாயார் தலைமறைவு

சீனாவில் தாயார் ஒருவர் புற்று நோயால் கடுமையாக அவதிப்பட்டு வரும் தமது சிறு வயது மகனைத் தவிக்கவிட்டு தலைமறைவாகியுள்ளார். கல்லீரல் புற்றுநோயால் கடுமையாக பாதிக்கப் பட்ட சிறுவன் தற்போது அவனது உறவினர்களால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். கடந்த 2016 ஆம் ஆண்டு சிறுவனுக்கு கல் லீரல் புற்றுநோய் இருப்பதாக மருத்து வர்களால் கண்டறியப்பட்டது. இதனையடுத்து தீவிர சிகிச்சை அளிக் கப்பட்ட நிலையில் புற்றுநோய் குணமானதாக கூறப்படுகிறது.இந்த நிலையில் சிறுவனுக்கு மீண்டும் புற்றுநோய் தாக்கியுள்ளது. இதனிடையே சிறுவனின் சிகிச்சைக் காக சேகரித்து வைத்திருந்த சுமார் 22,500 பவுண்டு தொகையுடன் சிறு வனை நிர்கதியாக கைவிட்டு அவ னின் தாயார் தலைமறைவாகியுள் ளார். இதனிடையே தலைமறைவான தமது மனைவியை பல நாள் முயற் சிக்குப் பின்னர் தொடர்பு கொண்ட சிறுவனின் தந்தை, பொலிஸாரிடம் புகார் அளிப்பதாக மிரட்டிய பின்ரே குறித்த பெண்மணி பணத்தை திருப் பித் தர ஒப்புக்கொண்டுள்ளார்.



சர்வஜன வாக்கெடுப்புக்கு

## ஈராக் எதிர்ப்பு



ஈராக் குர்திஷ்தானில் நடத்தப்பட்ட சர்வ ஜன வாக்கெடுப்பை, ஈராக் அரசாங்கம், மீண்டும் எதிர்த்துள்ளது. ஏற்கெனவே பல தடவைகள், தனது எதிர்ப்பை வெளி யிட்டிருந்த ஈராக் அரசாங்கம், தற்போது எச்சரிக்கையை விடுத்துள்ளது. இதன் போது உரையாற்றிய ஈராக்கியப் பிரதமர் ஹைடர் அல்-அபாடி, "சர்வஜன வாக் கெடுப்பு, அரசமைப்புக்கு முரணானது என்ற அடிப்படையில், அதன் முடிவுகள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கோ அல்லது பேச்சுக்களை மேற்கொள்வதற்கோ, நாம் தயாராக இல்லை எனவும் குர்திஷ் தானில் காணப்படும் விமான நிலையங் களின் கட்டுப்பாட்டை, 3 நாட்களுக்குள் மத்திய அரசாங்கத்துக்கு வழங்க வேண்டு மெனத் தெரிவித்தோடு, அவ்வாறில்லை யெனில், விமானங்களுக்கான சர்வதேசத் தடையொன்றை எதிர்கொள்ள வேண்டி யேற்படுமெனவும்" குறிப்பிட்டார்.




உக்ரைனில் இராணுவப் பயன்பாட்டிற்காகப் பெரு மளவில் சேகரித்து வைக்கப்பட்டிருந்த வெடி மருந் துக் கிடங்கு ஒன்று வெடித்துச் சிதறியதில் பெரிய இழப்பு ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. இதற்கு ரஷ்யாவின் சதிச் செயலே காரணமாக இருக் கலாம் என உறுதிப்படுத்தப்படாத தகவலும் வெளியா கியுள்ளது. வெடிவிபத்துத் தொடர்பாக அந்தப் பகுதி யில் உள்ள 28,000 பொதுமக்களைப் பாதுகாப்பான பகுதிகளுக்கு உக்ரைன் அரசு வெளியேற்றியுள்ளது. விபத்துக்குள்ளான கிடங்கில் 83,000 குண்டுகள் பாது காக்கப்பட்டு வந்தன. உக்ரைன் நாட்டில் அமைந்துள்ள இராணுவக் கிடங்குகளில் இதுவே மிகவும் பெரிதா கும்.வெடி விபத்து நடந்த வின்னிஸ்ரா நகரின் அரு காமையில் அமைந்துள்ள கிராமத்தினர் பலருக்கும் காயங்களும், அவர்களது குடியிருப்புகளும் சேதமடைந் துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

4 வயதுக் குழந்தைக்குப் போதை மருந்து:


## தாய்க்கு 13 வருடச் சிறை

லண்டனில் தனது 4 வயதுக் குழந் தைக்கு போதை மருந்து கொடுத்த தாய்க்கு 13 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேற்படி பெண் சிறு வயதில் இருந்தே போதை மருந்துகளுக்கு அடிமை யானவர், இவருக்கு 4 வயது பெண் குழந்தை இருந்தது. இந்த நிலையில் கடந்த 2013 ஆம் ஆண்டு தனது குழந்தைக்கு போதை மருந்தைக் குடிப்பதற்கு கொடுத்ததனால் குழந்தையின் உடல்நலம் பாதிக்கப்பட்டு வந் தது.குழந்தை மயங்கி விழுந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டது.ஆனால், சிகிச்சை பலனின்றி குழந்தை இறந்துள்ளது, பின்னர் பிரேத பரிசோதனை அறிக்கையில் குழந்தை குடித்த போதை மருந்தால் அதன் இரத்தத்தில் விஷம் கலந்து சிறிது சிறிதாக குழந்தையின் உயிரை பறித் துள்ளது எனத் தெரிய வந்தது.



பின்னர் அவரின் மீது தொட ரப்பட்ட வழக்கு விசார ணையின் இறுதியில் அவருக்கு 13 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.மேலும் இதனை எதிர்த்து மேல்முறையீடு செய்த போதும், அவருக்கு விதிக்கப் பட்ட தண்டனை மீண்டும் உறுதிசெய்யப்பட்டது. எனது தாய் மது அருந்தும் பழக்கம் கொண்டிருந்ததால், சிறு வயதில் இருந்தே நானும் அந்த பழக்கத் துக்கு அடிமையானேன், இந்தத் தண்டனையானது ஒவ்வொரு நாளும் எனது மனதில் வலியை ஏற் படுத்தும்" எனக்குழந்தை தனது மன வேதனையை பகிர்ந்திருந்தது.

## சசிகலாவின் கணவர் வைத்தியசாலையில்



அ.தி.மு.க. அம்மா அணிப் பொதுச்செய லாளர்சசிகலாவின்கணவரும்,புதிய பார்வை ஆசிரியருமான எம்.நடராஜன் (வயது -74) கல்லீரல் பாதிப்பால் அவதிப்பட்டு வருகிறார்.கடந்த 10ஆம் திகதி சென்னை பெரும்பாக்கத்திலுள்ள குளோபல் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். கல்லீரல், சிறுநீரகம் செயல் இழந்த நிலையில் அவருக்குச் சிகிச்சை அளிக்கப் பட்டு வந்தது. இந்த நிலையில் நுரை யீரலும் பாதிக்கப்பட்டதால் மூச்சுத் திணறல் ஏற்பட்டது. சிறுநீரகம் செயலிழந்ததால் அவருக்கு 'டயாலிசிஸ்' செய்யப்படுகிறது.நடராஜனுக்குக் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டதால் கல்லீரல், சிறுநீரகம் வேண்டி தமிழக அரசின் உடல் உறுப்பு தானம் பதிவேட் டில் பதிவு செய்யப்பட்டது. ஆனால் இது வரையிலும் உறுப்புகள் கிடைக்க வில்லை. இதனால் உறவினர் ஒருவரின் கல்லீரலைத் தானமாகப் பெற்று அவ ருக்குப் பொருத்த வைத்தியர்கள் திட்ட மிட்டுள்ளனர். இது குறித்த முடிவு இன்று எடுக்கப்படவிருக்கிறது.

## எல்ஜி 'கே 7 ஐ' புதிய ஸ்மார்ட்போன் அறிமுகம்

எல்ஜி நிறுவனத்தின் கே3 (2017) மற்றும் எல்ஜி கே 4 (2017) ஸ்மார்ட்போன்கள் அதிகம் எதிர்பார்க்கப்பட்ட நிலையில், எல்ஜி நிறுவனம் மற்றொரு புதிய ஸ்மார்ட்போனை அறிமுகம் செய்துள்ளது. எல்ஜி கே 7 ஐ என அழைக்கப்படும் புதிய ஸ்மார்ட்போனில் எல்ஜி கொசுக்களை விரட்டும் புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
புதிய எல்ஜி கே 7 ஐ ஸ்மார்ட்போனுடன் பின்புறக் கவர் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கவரை வாடிக்கையாளர் தமது தேவைக்கு ஏற்ப பொருத்திக் கொள்ள முடி யும். இந்தக் கவரில் உள்ள ஸ்பீக்கர் அல்ட்ரா சோனிக், கதிர்களை வெளிப்படுத்தி கொசுக் களை விரட்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது இந்தியாவில் பட்ஜெட் விலையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள புதிய எல்ஜி கே 7 ஐ ஸ்மார்ட்போன் ஆண்ட்ராய்டு மார்ஷ் மல்லோ இயங்குதளம் கொண்டு இயங்குகிறது. புதுடெல்லியில் நேற்றுத் துவங்கிய இந்திய மொபைல் காங்கிரஸ் விழாவில் இந்த ஸ்மார்ட்போன் அறிமுகம் செய்யப்பட்டது.



# ‘யாழில் கில்லாடி யார்?’ முதலாவது அரையிறுதி இன்று

## இறுதிக்குள் நுழைய யங்ஹென்றிஸ் – பாடுமீன் மோதல்





அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் நடத்திருவம் ‘யாழின் கில்லாடி யார்?’ உதைபந்தாட்டத் தொடரின் நேற்றைய காலிறுதியில் வெற்றி பெற்ற யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம், குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகத்தை இன்றும், ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்தை எதிர்வரும் திங்கட்கிழமையும் எதிர்கொள்ளவுள்ளன.

நேற்று இரவு நடைபெற்ற காலிறுதியாட்டம் ஒன்றில் குப்பிளான் குறுஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

அனல் பறந்த இந்த ஆட்டத்தில் யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் போராடி வென்று அரையிறுதிக்குத் தகுதிபெற்றது.

ஆட்டநாயகனான யங்ஹென்றிஸின் தனேஸ் தெரிவுசெய்யப்பட்டார்.

இன்று இரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது அரையிறுதியாட்டத்தில் யங்ஹென்றிஸ், குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்கொள்ளவுள்ளது.

இதேவேளை, நேற்றிரவு நடைபெற்ற மற்றொரு காலிறுதியாட்டத்தில், யாழ். பல்கலைக் கழகத்தை எதிர்த்து ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் மோதியது.

இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஞானமுருகன், 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குள் நுழைந்தது.

ஞானமுருகன் சார்பாக வகி 2 கோல்களையும், தீபன் ஒரு கோலையும் போட்டனர். ஆட்ட நாயகனாக வகி தெரிவுசெய்யப்பட்டார்.

ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் அரையிறுதிப்போட்டியில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகத்தை எதிர்வரும் திங்கட்கிழமை எதிர்கொள்ளவுள்ளது. (ஐ)

# அனல் பறந்த இறுதியாட்டம்: மத்தியை வீழ்த்தியது இந்து இளைஞர்




மல்லாகம் சிறிமுருகன் விளையாட்டுக் கழகம் கழகம் நடத்திய கரப்பந்தாட்டத் தொடரின் சம்பியனாக ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் மகுடம் சூடியது.

நேற்று இரவு நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் ஆவரங்காலின் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மத்திய விளையாட்டுக் கழகம் மோதியது.

அண்மைக் காலமாக இந்த இரு கழகங்களுமே யாழ். மாவட்ட ரீதியில் நடைபெறும் தொடர்களின் சம்பியன்களாக மாறி மாறி மகுடம் சூடிவரும் நிலையில் நடைபெற்ற இந்த இறுதியாட்டம் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

அதன்படி பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதல் இரு சுற்றுக்களையும், ஆவரங்கால் இந்து இளைஞர் 26:24, 25:17 என்ற புள்ளிக் கணக்கில் தனதாக்கியது.

பின்னர் வெகுண்டெழுந்த மத்தி, அடுத்த இரு சுற்றுக்களையும் 25:21, 25:15 என்ற புள்ளிக் கணக்கில் தனதாக்க, ஆட்டம் மேலும் சூடேறி, வெற்றியாளரைத் தீர்மானிக்கும் ஐந்தாவது சுற்றுக்கு ஆட்டம் தள்ளப்பட்டது.

இதில், 15:11 என்ற புள்ளிக்கணக்கில் கடும் போராட்டத்துக்கு மத்தியில் வெற்றிபெற்ற இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் 3:2 என்ற சுற்றுக்கணக்கில் சம்பியன் பட்டத்தையும் தனதாக்கிக்கொண்டது. (ஐ)

# பொம்மர்ஸை வென்றது சென். அன்ரனிஸ்!

நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்திவரும் 35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டத் தொடரில், நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

நேற்று இரவு நடைபெற்ற இந்த ஆட்டத்தில், வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

இதில் அசத்தலாக விளையாடிய மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம், 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ஐ)

# கோல் மழை பொழிந்த ஆட்டங்கள்; சென். நீக்லஸ், திருமகள் அசத்தல்

உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் உதைபந்தாட்டத் தொடரில் நேற்று நடைபெற்ற கோல் மழை பொழிந்த ஆட்டங்களில் சென். நீக்கிலஸ் மற்றும் திருமகள் விளையாட்டுக் கழகங்கள் வெற்றி பெற்றன.

இந்தத் தொடரில் நேற்று நடைபெற்ற முதலாவது போட்டியில் நாவாந்துறை சென். நீக்லஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மயிலங்காடு ஞானகலா விளையாட்டுக் கழகம் மோதியது. இதில், சென். நீக்லஸ் விளையாட்டுக் கழகம் 7:0 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்றது.

பின்னர் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் அராலி திருமகள் விளையாட்டுக் கழகம் மணியம் தோட்ட ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்கொண்டது. இதில், திருமகள், 9:0 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ஐ)

# மணற்காடு சென். அன்ரனிஸ் தொடர்: அண்ணா சிலையடி, அண்ணா ஸ்ரார் வெற்றி

மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரில், நேற்றைய ஆட்டங்களில், அண்ணாசிலையடி மற்றும் யாழ். அண்ணா ஸ்ரார் விளையாட்டுக் கழகங்கள் வெற்றிபெற்றன.

சுனாமியால் இறந்தவர்களினதும் கழகத்தின் மறைந்த வீரர்களினதும் நினைவான மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் உதைபந்தாட்டத் தொடரை நடத்திவருகிறது.

இதில் நேற்று நடைபெற்ற முதலாவது போட்டியில் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ். அண்ணா ஸ்ரார் விளையாட்டுக் கழகம் மோதவிருந்தது. இதில், குறிஞ்சிக் குமரன் வருகை தராத காரணத்தால் யாழ். அண்ணா ஸ்ரார் விளையாட்டுக் கழகத்துக்கு வெற்றி வழங்கப்பட்டது.

இரண்டாவது போட்டியில் அண்ணா சிலையடி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சிமாட் போய்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

இந்த ஆட்டத்தில் அண்ணாசிலையடி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. அண்ணாசிலையடி சார்பாக நிவேதன் 2 கோல்களையும், சிந்துயன், றஜீபன், இந்துயன் ஆகியோர் தலா ஒரு கோலையும் போட்டனர். சிமாட் போய்ஸ் சார்பாக மதிசுதன் ஒரு கோல் போட்டார். ஆட்ட நாயகனாக அண்ணாசிலையடியின் நிவேதன் தெரிவுசெய்யப்பட்டார். (ஐ)



# தேரர்களின் செயற்பாடு பௌத்தத்துக்கு அவமானம்

இலங்கைக்கு வந்த ரோஹிங்கிய முஸ்லிம் அகதிகளை நாடு கடத்துமாறு கோரி கொழும்பில் பௌத்த கடும்போக்குவாத தேரர்கள் செயற்பட்ட விதம் கண்டிக்கத்தக்கது . இவ்வாறான தேரர்களின் இந்த செயற்பாடு பௌத்த மதத்துக்கும் பெரு அவமானம் எனத் தெரிவித்துள்ளார் அமைச்சர் ராஜித சேனாரத்ன. 1983 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வன்முறைச் சமபவங்களில் சமார் 20 இலட்சம் இலங்கையர்கள் வெளிநாடுகளில் புகழிடம் கோரிச் சென்றனர். அப்போது அந்த நாடுகளில் நம்நாட்டவர்கள் தாக்கப்பட்டனரா? எது மனிதாபிமானம்? என்றும் கேள்வி எழுப்பினார். ரோஹிங்கிய முஸ்லிம்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த இடத்துக்குச் சென்று தாக்குதல் நடத்த முற்பட்டவர்களை கைதுசெய்யாமல், பொலிஸார் வேடிக்கை பார்த்திருந்தால் அவரை கைதுசெய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த விடயம் குறித்து அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடப்படும் ஏன்று குறிப்பிட்ட அமைச்சர் புத்த பகவானின் பாதையைப் பின்பற்றும் தேரர்கள் இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபட்டிருக்கமாட்டார்கள். புத்த பிரான் மனித நேயத்துக்கு முக்கியத்துவம் அளித்துள்ளார் என்றும் அமைச்சர் கூறினார். (உ)

## இன்றைய கருத்தோவியம்




# இரண்டாவது இருதய மாற்று சத்திர சிகிச்சையும் வெற்றி

இலங்கையின் இரண்டாவது இருதய மாற்று சத்திர சிகிச்சையும் வெற்றிகரமாக நிறைவடைந்ததாக அமைச்சரவை துணை பேச்சாளரும் சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சருமான டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். மனிநேயத்துக்கு முன்னுரிமையளித்து மேற்கொண்ட டாக்டர்களையும் அமைச்சர் பாராட்டினார். விசேட மருத்துவ நிபுணர்கள் அடங்கிய குழாமின் அர்ப்பணிப்புக் காரணமாக வெற்றி சாத்தியப்பட்டதென்றும் அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன தொவித்தார். இந்தச் சத்திர சிகிச்சை செவ்வாய்க்கிழமை 8 மணி தொடக்கம் புதன் கிழமை அதிகாலை 5 மணி வரை நீடித்தது. கண்டி போதனா வைத்தியசாலையில் இரண்டு மாதங்களுக்கு முன்னர் முதலாவது சத்திர சிகிச்சை இடம் பெற்றமையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (உ)





## சுகாதார வைத்திய நிலையம் மக்கள் பாவனைக்குக் கையளிப்பு

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சினால் சம்மாந்துறை நெய்னாகாடு பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட கிராமோதய சுகாதார வைத்திய நிலையம் மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டு நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இப்பிரதேசத்தில் வைத்திய நிலையம் ஒன்று இல்லாத நிலையில் மக்களின் நீண்டநாள் கோரிக்கைகளுக்கு அமைவாக இந்த வைத்திய நிலையம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. (உ)

## கிராமிய நீர் வழங்கல் பதுளையில் ஆரம்பம்

பதுளை, பஸ்ஸர, ஹொப்டன் - நேரந்தபொல மற்றும் அம்பதென்ன கிராமிய நீர் வழங்கல் திட்டத்தின் நிர்மாணப் பணிகளை நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆரம்பித்து வைத்தார்.
நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் இத்திட்டம் நேற்று ஆரம்பமானது. ஹொப்டன் பகுதித் திட்டத்தின் மூலம் சுமார் 455 குடும்பங்களும், அம்பதென்ன பகுதி நீர்வழங்கல் திட்டத்தின் மூலம் 472 குடும்பங்களும் நன்மையடையவுள்ளன. இந்த நிகழ்வில் ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தஸநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்வடிவேல் சுரேஷ், பதுளை மாவட்ட அமைச்சின் இணைப்பாளர் பீ. தாஜுதீன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (உ)





## ரோஹிங்கியர்கள் மீதான தாக்குதலுக்கு கண்டனம்


ரோஹிங்கிய அகதிகள் மீது கல்கிசைப் பிரதேசத்தில் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தை அமைச்சர் மங்கள சமரவீர வன்மையாக கண்டித்துள்ளார். இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக அமைச்சர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் கண்காணிப்பில் இருந்த அகதிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதை ஏற்றுக்கொள்ள முடியாது. இது பௌத்த மதத்தை நிந்திக்கும் செயலாகும் இந்த குற்றச் செயலில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகப் பொலிஸார் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார். (உ)

## மட்டக்களப்பில் சுவாமி விபுலானந்தர் மாநாடு

மட்டக்களப்பில் சுவாமி விபுலானந்தர் மாநாடு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 05, 06 , 07 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வு மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தில் நடைபெறவுள்ளது. சுவாமி விபுலானந்தரது 125 ஆண்டு ஜனன தின நிறைவை முன்னிட்டு இந்துமத அலுவல்கள் அமைச்சு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் என்பன கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்துடன் இணைந்து இம்மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளன.



இந்த நிகழ்வில் அறிஞர்கள் , சமூகப்பிரமுகர்கள் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர். அத்துடன் கலைஞர்கள் மற்றும் மாணவர்கள் வழங்கும் கலைநிகழ்ச்சிகள், நூல் வெளியீடு, நூல் கண்காட்சி, அறிஞர்கௌரவிப்பு, சுவாமி விபுலானந்தர் வரலாற்று அறிவுப்போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு, கலாசார ஊர்வலம் என பல்வேறு சிறப்பம்சங்கள் நடைபெறவுள்ளது. (உ)



# இலங்கைக்கு 4 கோடி யூரோ நிதி

வர்த்தக வசதிகளை வழங்குவதற்காகவும், இலங்கையில் மீள் இணக்கச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தவும் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு மேலதிகமாக 4 கோடி யூரோக்களை வழங்கவுள்ளது. அமைச்சர் திலக் மாரப்பனவுக்கும், ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையில் பிரெசெல்ஸ் நகரில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின்போது இதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டது. இதன்போது இலங்கையில் சமகால அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் இடம்பெற்றமை மகிழ்ச்சியளிப்பதாக ஐரோப்பிய ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது. ஜிஎஸ்பி சலுகைகளுக்கான பொறுப்புக்களை நிறைவேற்றும் என்றும் ஒன்றியம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.
இலங்கையில் பாரிய அளவிலான வெளிநாட்டுச் சந்தை ஐரோப்பாவாகும். இருதரப்புக்கும் வருடாந்த கொடுக்கல் வாங்கலின் பெறுமதி 500 கோடி அமெரிக்க டொலர்களை தாண்டுகிறது. ஜிஎஸ்பி வரிச்சலுகை கிடைத்ததைத் தொடர்ந்து இலங்கையின் ஏற்றுமதி குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்குமென ஐரோப்பிய ஒன்றியம் நம்பிக்கை வெளியிட்டிருக்கிறது. (உ)

## நாளை நாளும் கோளும்

29.09.2017 வெள்ளிக்கிழமை ஏவிளம்பி வருடம் புரட்டாதி மாதம் 13 ஆம் நாள்
நவமி மு.இ. 10.25 வரை | பூராடம் பி.ப. 03.28 வரை | சித்தயோகம் | மகாநவமி விரதம், சரஸ்வதி பூசை
இராகுகாலம் 10.32 - 12.02 | சுபநேரம் 06.02 - 07.32 | எமகண்டம் 03.02 - 04.32

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| செலவு | இன்பம் | வெற்றி | பகை | ஆர்வம் | நன்மை | நலம் | அலைச்சல் | சாந்தம் | சுபம் | ஒய்வு | சிந்தனை |

எதிரொலி
Ethiroli

## அந்த நாள் ஞாபகம்.....!



### 1795.09.28

யாழ்ப்பாணத்தை ஜெனரல் ஸ்டுவேர்ட் தலைமையிலான பிரித்தானியப் படைகள் கைப்பற்றின.

# புழுக்கள் நிறைந்த கழிவு நீர் குழி: நடவடிக்கை எடுக்காதது ஏன்?

கிளிநொச்சி பொதுச் சந்தைக்கு முன்பாக கனகபுரம் வீதியில் உள்ள சிறிய தேனீர் கடை ஒன்றின் கழிவு நீர் செல்லும் திறந்த குழியில் புழுக்கள் நிறைந்து காணப்படுகிறது. குறித்த விடயம் தொடர்பில் பிரதேச சுகாதார பரிசோதகர்களின் கவனத்திற்கு வியாபாரிகளினால் கொண்டு செல்லப்பட்ட போதும் உரிய நடவடிக்கை எதுவும் இல்லை எனவும், மாவட்ட அரசியல்வாதி ஒருவரின் செல்வாக்கு மிக்க நபர் என்பதனால் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வில்லை எனவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். தேனீர் கடையில் இருந்து வெளியேறுகின்ற அனைத்து கழிவு நீரும் திறந்த குழியில் விடப்படுகிறது. இதனால் குறித்த குழியில் புழுக்கள் நிறைந்து காணப்படுகிறது. இது அயல் பிரதேசங்களின் சுகாதாரத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்குகிறது. (உ-13)



## உணவகங்களில் விலை அதிகரிப்பு

சமையல் எரிவாயு விலை அதிகரிப்பைத் தொடர்ந்து உணவகங்களில் பரிமாறப்படும் உணவுகளின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை உணவக உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது. இன்று முதல் இந்த விலை அதிகரிப்பு நடைமுறை படுத்தப்படவுள்ளதாக அச்சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்தியவசிய பொருட்களின் விலை அதிகரிப்பின் காரணமாக, நாடு முழுவதிலுமுள்ள உணவகங்கள் பாரிய சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவித்துள்ள அச்சங்கம், நுகர்வோருக்கு உயர்தரத்திலான உணவுகளை நியாய விலையில் வழங்குவதே தமது நோக்கமாக இருக்கின்றபோதிலும், அந்நோக்கத்தை ஈடு செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளது. உணவு தயாரிப்பதற்கு பிரதானமாக எரிவாயு பயன்படுத்தப்படுவதாகச் சுட்டிக்காட்டியுள்ள சங்கம், சமையல் எரிவாயுவின் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து உணவுகளின்விலைகளை அதிகரிப்பதை தம்மால் கட்டுப்படுத்த முடியாத காரணியாக காணப்படுவதாக தெரிவித்துள்ளது. (உ)

## அத்தியாவசியப் பொருட்களின் விலை குறைப்பு

அரிசி, பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு ஆகியவற்றின் விலை குறைக்கப்பட்டு இன்று தொடக்கம் சதோச ஊடாக விற்பனை செய்யப்படவேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆலோசனை வழங்கியுள்ளார். அத்தியாவசிய உணவு பொருட்களின் விலை தொடர்பான விசேட கலந்துரையாடல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி தலைமையில் நேற்று நடைபெற்றபோதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார். அரிசி இறக்குமதி செய்யும் வர்த்தகர்கள் கூடுதலான இலாபத்துடன் விலையை நிர்ணயிப்பதாக தெரியவந்தமையால் குறித்த வர்த்தகர்களுடன் கலந்துரையாடி விலைகுறைப்பு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார். அடுத்துவரும் மாதங்களில் சர்வதேச சந்தை விலைகளை கருத்திலெடுக்காமல் ஐந்து இலட்சம் மெற்றிக் தொன் அரிசியை அரசாங்கத்தின் மூலம் இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டதுடன், சதோசவினால் விற்பனை செய்யப்படும் அனைத்து வகையான அரிசிகளினதும் விலைகளை குறைத்து அந்த விலைகளை இன்றைதினம் அறிவிக்குமாறும் ஜனாதிபதி நேற்று இடம்பெற்ற கலந்துரையாணடலில் தெரிவித்தார். (உ)

## குற்றச் செயல்களைத் தடுக்க இலங்கை – ஆஸி. ஒப்பந்தம்

நாட்டின் எல்லையினூடாக மேற்கொள்ளப்படும் பல்வேறு குற்றச்செயல்களை தடுப்பது தொடர்பில் இலங்கை மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படவுள்ளது. இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சரான அமைத்திரிபால சிறிசேனவினால் முன்வைக்கப்பட்டயோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது. இலங்கை - ஆஸ்திரேலியா இடையில் காணப்படுகின்ற மனித கடத்தல்கள் மற்றும் எல்லை மீறிச்செல்கின்ற ஏனைய குற்றங்களை தடுப்ப தற்காக ஏற்கெனவே நடைமுறையில் இருக்கும் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் புதிய ஒப்பந்தம் முன்மொழியப்பட்டுள்ளது. குறித்த ஒப்பந்தத்தில் இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு மற்றும் ஆஸ்திரேலியா அரசாங்கத்தின் குடிவரவு மற்றும் எல்லைப் பாதுகாப்பு திணைக்களம் ஆகியன கைச்சாத்திடவுள்ளன. (உ)

## பருத்தித்துறைக் கடைகளில் அதிரடிச் சோதனை

பருத்தித்துறை நகரப் பகுதிகளில் உள்ள வியாபார நிலையங்களில் இன்று அதிரடி பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட குறித்த பரிசோதனையின்போது பொருட்களின் விலை காட்சிப்படுத்தாத மற்றும் காலாவதியான பொருட்களை விற்பனை செய்த 5 கடைகள் அடையாளங் காணப்பட்டன. குறித்த கடைகளுக்கு எதிராக வழக்கு தொடரப்படவுள்ளதாக விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (உ)

## இலங்கைக்குள் நுழைய வடகொரியருக்கு கட்டுப்பாடு

வடகொரியப் பிரஜைகள் மீது இலங்கை அரசாங்கம் கடுமையான வீசா கட்டுப்பாடுகளை அறிமுகம் செய்துள்ளது. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவையின் தீர்மானத்துக்கு அமைய இந்த வீசா கட்டுப்பாடுகள் அமுல் படுத்தப்பட உள்ளன. வடகொரியா அணுவாயுதங்கள் மற்றும் ஏவுகணைகள் தயாரித்து வருவதனால் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவை சில தடைகளை விதித்துள்ளது. இலங்கைக்குள் பிரவேசிக்கும் வடகொரியப் பிரஜைகள் தொடர்பில் கடுமையான வீசா நடைமுறைகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. இணைய முறையின் ஊடாக வடகொரிய பிரஜைகள் இலங்கை வீசா பெற்றுக்கொள்ள வாய்ப்புக் கிடையாது எனவும்அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## வெளிநாட்டு நாயணங்களுடன் கட்டுநாயக்காவில் ஒருவர் கைது

16 இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயங்களுடன் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார். சிங்கப்பூரில் பணியாற்றும் இவர் சம்மாந்துறைப் பகுதியைச் சேர்ந்த 35 வயதான ஒருவராகும். இவர், குறித்த பணத்தை சிங்கப்பூருக்கு கடத்த முற்பட்ட நிலையில் நேற்றையதினம், விமான நிலைய சுங்கப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 10,000 அமெரிக்க டொலர்கள் மற்றும் 643 சிங்கப்பூர் டொலர்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. இவற்றின் மொத்தப் பெறுமதி 16 இலட்சம் ரூபா என சுங்கப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர். இதேவேளை, குறித்த பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதோடு, சந்தேக நபருக்கு ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகவும் சுங்கப் பிரிவினர் சுட்டிக்காட்டியுள்ளனர். (உ)

## தென்கிழக்குப் பல்கலையில் 35 ஊழியர்கள் பணி நீக்கம்

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றிய 35 தற்காலிக ஊழியர்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர் எனவும், இது தொடர்பாக உயர்கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவுக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருப்பதாகவும் அம்பாறை மாவட்ட அரச பணியாளர்கள் சங்கத்தின் செயலாளர் ஏ.எல்.எம்.சாதிக் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், சேவையிலிருந்து நீக்கப்பட்டவர்கள் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் கடந்த மூன்று வருடம் தொடக்கம் பத்து வருடங்களாக தற்காலிக அடிப்படையில் சிற்றூழியர்களாக கடமையாற்றி வந்துள்ளனர். இவர்களுக்கு நாளாந்த கொடுப்பனவு அடிப்படையில் மாதாந்த சம்பளம் வழங்கப்பட்டு வந்துள்ளது. வழமை போன்று கடந்த திங்களன்று காலை கடமைக்கு சமூகமளித்து வரவுப் பதிவேட்டில் கையொப்பமிட்டிருந்த இந்ம ஊழியர்கள் மாலை வேளையில் கடமை நிறைவுக்காக்கான கையொப்பமிடுவதில் இருந்து தடுக்கப்பட்டுள்ளனர். இவர்கள் கடமைகளில் இருந்து நிறுத்தப் பட்டிருப்பதாகதெரிவிக்கப்பட்டிருக்கிறது. - என்றார்.

## வைகோவைத் தாக்க முயற்சி இலங்கை தூதரகம் முற்றுகை



ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையகத்தில், வைகோ மீது இலங்கையர்கள் சிலர் தாக்குதல் நடத்த முற்பட்டதாக கூறப்படும் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, சென்னையில் உள்ள இலங்கை துணை தூதரகத்தின் முன் மதிமுகவினர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மதிமுக துணைப் பொதுச்செயலாளர் மல்லை சத்யா தலைமையில் 150க்கும் மேற்பட்டோர் இலங்கை துணைத் தூதரகத்தை முற்றுகையிட பேரணியாக சென்றனர். ஜெனிவாவில் வைகோ மீது தாக்குதல் நடத்த முயற்சி செய்த சம்பவத்தில் இலங்கை அரசுக்கு இந்திய மத்திய அரசு கண்டனம் தெரிவிக்க வேண்டும் என முழக்கங்கள் எழுப்பினர். இந்த நிலையில், தடையை மீறி இலங்கை துணைத் தூதரகத்தை முற்றுகையிட முயன்றவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தி கைது செய்துள்ளனர். (எ)

### முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**தமிழர் மனங்க...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் இனியும் அம்மக்களின் மனங்களை வெல்வது சாத்தியமற்றதாகிவிட்டதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது நடைபெற்று வரும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அமர்வின் பக்க நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், இலங்கையில் அமைக்கப்படவுள்ள காணாமல் போனோர் குறித்த அலுவலகம், சர்வதேசத்தின் நம்பிக்கையை பெறத் தவறியுள்ளதாகவும் நிமல்கா தெரிவித்துள்ளார். (எ)

**மினிபஸ்ஸுடன்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மினிபஸ்ஸை முந்திச் செல்ல முற்பட்ட வேளையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர். காயமடைந்தவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் பிரபல தனியார் கல்வி நிலைய ஆசிரியரும், பளை பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தரும் என தெரியவந்துள்ளது. (உ-212)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 28.09.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.